ரஷியாவின் அடுத்த இலக்கு ஐரோப்பாவில்?

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.

MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 ‖ சென்னை (3—7—50) ‖ வெளியீடு (4—7—50) ‖ இதழ் 294

மத்திய கிழக்கிலும் தாக்குதல் ஏற்படலாமென சந்தேகம்

துருக்கி எல்லையிலும் ரஷியப் படைகள் குவிகின்றன

போர்மோசா தாக்கப்பட்டால் போர் வேகம் அதிகரிக்கும்

கொரியா போரின் எதிர்கால விளைவுகள்

கொரியாப் போர் மூண்ட விதமும், நடைபெற்றுவரும் முறையும், கம்யூனிஸ்ட் படைகளின் தாக்குதல் வேகமும், கொரியாப்போர்பற்றி ரஷியா மௌனம் சாதிப்பது இன்னபிற நிகழ்ச்சிகளைக் கூர்ந்துநோக்குவோருக்கு, கொரியாப்போர், அடுத்துவரவிருக்கும் உலகப் போருக்கு அச்சாரம் போடப்பட்டிருப்பதாகவே தோன்றும். கொரியாப்போர் காரணமாக நேச நாடுகளின் கவனம் ஆசியா பக்கம் திரும்பும். அதே நேரத்தில் ஐரோப்பாவில் ஜெர்மனி, யூகோஸ்லவியா நாடுகளை அல்லது மத்திய கிழக்கு நாடுகளைத் தாக்கித் தன் வசப்படுத்திக்கொள்ளலாம் என்பதே, ரஷியாவின் நோக்கமாக இருக்கலாம். எனவே, ரஷியாவின் அடுத்த பாய்ச்சல் ஐரோப்பாவில் தான் இருக்கும் என்று, நேசநாடுகள் ஐயப்படுகின்றன. அதற்கேற்பவே ஜெர்மனி நிலைமையும் இருந்து வருகிறது. விரைவில் ஜெர்மனியும் கொரியாவாக ஆக நேரிடுமோ என்னவோ!

லண்டன், ஜூலை 2—

"கொரியாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள்பற்றி ரஷ்யா இன்னும் மௌனமாகவே தான் இருக்கிறது என்றும் சீன கம்யூனிஸ்டுகள் போர்மோசா மீது படையெடுத்தால், புது ஆபத்துகள் ஏற்படும் என்று இங்கு கருதப்படுகிறது.

போர்மோசா படையெடுப்புக்கு எல்லாம் சித்தமாக இருக்கிறதென்றும்யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரிட்டிஷ் கடற்படை நடவடிக்கைகள் பலமாக இருப்பதால் தான், போர்மோசா படையெடுப்பு இன்னும் உருவாகவில்லை என்று, ஹாங்ஹாங் செய்திகள் கூறுகின்றன

நேசநாடுகள் கொரியா போர்மோசா கீழ்க்கோடியில் விழிப்பாக இருக்கும்போது ரஷ்யா ஐரோப்பாவிலோ அல்லது மத்யகிழக்கிலோ தன் கைவரிசையைக் காட்டலாம் என்பதைவாஷிங்டன் அறிந்து அதற்கும் தயார்படுத்திக் கொள்கிறது

ஐரோப்பா பக்கம் ரஷ்யா தன் கவனத்தைச் செலுத்தினால், யூகோதான் தாக்கப்படும் படியாக இருக்கும். அதன் எல்லையைச் சுற்றி காமின்பாரம் நாடுகளின் படைகள் குவிக்கப்படுகின்றன இப்படைகள் யூகோமீது பாயும் பட்சத்தில் அது ரஷ்ய தூண்டுகோலின் பேரிலேயே இருக்கும்.

துருக்கி எல்லையிலும் ரஷ்யத் துருப்புகள் இருக்கின்றன. பாரசீகத்திற்கெதிராக மிகவும் விஷமத்தனமான பிரசாரத்தை ரஷ்யா செய்துவருகிறது. கொரியாவில் ரஷ்யாவின் கை சம்பந்தப்படாமல் இந்த இடங்களில் ரஷ்யா பாய்ந்து உலககவனத்தைத்திருப்பலாம் என்று சொல்லப்படுகிறது"

மேலே தரப்பட்டிருக்கும் செய்தியிலிருந்து கொரியப் போரின்விளைவாக அமெரிக்கா ஆங்காங்கே போருக்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதும், ஐ. நா சபையின் சார்பிலே ஒரு படை தயா[illegible]வதும் ஆன நிகழ்ச்சிகளிலிருந்து; அமெரிக்கா போர்க்கோலம் பூண்டுவிட்டது என்பது ஒருவாறு தெரிய வருகிறது. அமெரிக்காவைப்போலவே ரஷியாவும் எதிர்ப்பைச் சமாளிக்கத் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது. கொரியாவில் போர் நடக்கும் இதே நேரத்தில் ஜப்பான் மீதும் ரஷியாவின் கண்ணோட்டம் செல்லுகிறது. ரஷிய வெடிகுண்டு விமானம் ஒன்று, ஜப்பான்மீது பறந்ததாகச் செய்தி கிடைத்திருக்கிறது. சீன கம்யூனிஸ்டுத் துருப்புகள் முன்னரே போர்மோசாவைப் பிடிக்க முயன்று வருகின்றனர். கொரியாப் போரில் அமெரிக்கா கவனம் செலுத்திவரும் இவ்வேளையில் போர்மோசாவைச் சுலபத்தில் தாக்கவும் ரஷியா திட்டமிட்டிருக்கக் கூடும். சுருங்கச் சொல்லவேண்டுமானால், மூன்றாவது உலகப் போர் ஆசியாவில்தான் ஆரம்பமாகும் எனலாம். இப்போதுள்ள நிலைமையில் பெரிய நாடுகளைப் பிடிக்கும் நோக்கம் ரஷியாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. கொரியா, ஜப்பான் போர்மோசா, இந்தோனேஷியா

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க

"மாஸ்கோவுக்கு திரும்புங்கள்"

அதிகாரிகளுக்கு ரஷியா உத்தரவு

லண்டன், ஜூலை 2—

அமெரிக்காவிலுள்ள ரஷ்ய அதிகாரிகளுக்கு, மாஸ்கோ திரும்பும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும், எனத்தெரிகிறது

ஐ. நா.வில் சோவியத் பிரதம பிரதிநிதியான மேலஸ் [illegible]ஐ. நா. உதவிக் காரியதரிசியாக இருக்க கான்ஸ்டான்டைன் ஸிஸ், செங்கோ இவர்கள் திடீரென்று ரஷ்யாவுக்குப் புறப்பட்டு[illegible]ன்று விட்டனர். அமெரி[illegible] ஸ்தானி[illegible]லயத்தைச் சே[illegible]திகாரிகளும் மாஸ்கோ[illegible]டிச் சென்று[illegible]

கொரியாப் போரில் அமெரிக்கர் வெற்றிபெற்றால்...?

—(0)—

ஹாங்ஹாங் அல்லது போர்மோஸா தாக்கப்படுவது நிச்சயமாம்

நியூயார்க், ஜூலை 2—

கீழ்க்கோடியிலுள்ள 6 பிரிட்டிஷ் ராணுவ டிவிஷன்கள், தென் கொரியாவில் உபயோகிக்கப்படுவதற்காக மக் ஆர்தர் தலைமைக்கு மாற்றப்படும் என்று, லண்டன் செய்தியொன்று கூறுகிறது

கொரியாவில், அமெரிக்கர் கள் வடகொரியாப் படையைத் தென் கொரியாவிலிருந்து விரட்டிவிடும் பட்சத்தில், சீன கம்யூனிஸ்டுகள் போர்மோஸாவையோ அல்லது ஹாங்காங்கையோ அல்லது இந்தோசீனாவையோ நிச்சயமாகத் தாக்குவர் என்றும் இச்செய்தி கூறுகிறது.

நியூயார்க் மேயர் ஓடையர் அவசர சிவில் பாதுகாப்பு கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தப்போர் எங்கு கொண்டுபோய்விடும் என்பது தெரியவில்லை. எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என்றும் அவர் கூறுகிறார். அமெரிக்காவிலுள்ள எல்லா முக்ய தளங்களும், பனமா கால்வாய் உள்பட நீர் நிலையங்களும் பொது மக்கள் உபயோகிக்க முடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன.

ஐ நா.படை ஏற்படுவது நிச்சயமாகிவிட்டது

லேக் ஸக்ஸஸ், ஜூலை 2—

[illegible]

ஜெட்டாவில் பாக் விமானங்களுக்கு தடை

கராச்சி, ஜூலை 2—

[illegible]

வியன்னாவில் உணவு நெருக்கடி

கொரியாப்போர் எதிரொலி

டமாஸ்கஸ், ஜூலை 2—

ஸிரியாவில் மந்திரிசபை நெருக்கடி எதுவும் இல்லை என்றும், சில மந்திரிகள் ராஜிநாமா செய்ததாக கூறப்படுவது உண்மையல்லவென்றும் ஸிரிய பிரதமர் கூறுகிறார்.

மேற்கு ஜெர்மனியையும் பெர்லினையும் ரஷியா வசப்படுத்தும்

—(...)—

இரத்தம் சிந்தாமல் நாட்டை பிடிக்கத் திட்டம்

லண்டன், ஜூலை 2—

யுத்தம் இல்லாமல், மேற்கு ஜெர்மனியையும், பெர்லினையும்தன்வச படுத்திக்கொள்ள ரஷ்யா நீண்ட கால திட்டம் போட்டிருக்கிறதென்று, அக்டோபரில் நடைபெற இருக்கும் கிழக்கு ஜெர்மன் தேர்தலில், இதற்கான ஒரு படி முன்னேற வழிசெய்யப்படும் என்றும் பெர்லினிலுள்ள டெய்லி மெயில் நிருபர் டேவிட் வாக்கர் கூறுகிறார்.

ரஷ்யாவின் திட்டத்தை விளக்கி அவர் கூறுவதாவது:-

ரஷ்யா, ஜெர்மனியிலிருந்து சோவியத் துருப்புகள் வெளியேறுவதாகக் காட்டிக்கொள்ளும். பின்னர், கிழக்கு ஜெர்மனியுடன் ரஷ்யா ஒரு ராணுவ உடன்படிக்கையைச் செய்துகொள்ளும்.

அங்கேரியுடன், கிழக்கு ஜெர்மனி செய்துகொ[illegible]ள்ள உடன்படிக்கை[illegible] போன்றதுதான். (கு[illegible]

வியன்னா ஜூலை[illegible]

கொரியா போரின் வி[illegible] வியன்னாவில் உணவு நெ[illegible] ஏற்பட்டிருக்கிறது. மக்க[illegible] பட்ட உணவுப் பொருள்களை[illegible] சேர்ப்பதில் முனைகிறார்கள். 1947 வருஷத்தில் காணப்பட்ட நீண்ட 'க்யூ' வரிசைகள் இப்பொழுது காணப்படுகின்றன. —ருேட்டர்

ஆட்சியைக் கவிழ்க்க ஆஸ்திகம் சதி செய்கிறது

—(0)—

டிட்டோவைக் கவிழ்க்க முயற்சி

ஆர்ச்பிஷப் கைது

பெல்கிரேட், ஜூலை 2—

யூகோ வின் மாஜி மன்னர் பீட்டரின் ஆதரவாளர் சிலர் டிட்டோவை அதிகாரத்திலிருந்து நீக்க செய்த சதி. [illegible]மாகிவிட்டது. இவ்வ[illegible]மாக, ஆர்ச்பிஷப் ஜெஸ்ஸா[illegible] என்கிற 73 வயது பாதிரி கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. [illegible] பெல்[illegible] விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், அவர் விடுவிக்கப்பட்டதாக யூகோஸ்லாவிய செய்திகள் கூறுகின்றன. ஆஸ்திரியா, இதாலி ஆகிய இடங்களிலிருந்து வ[illegible] பீட்டர் ஆதரவாள[illegible]க்கப்பட்டனர்.

மாலை மணி

சென்னை 3—7—50 திங்கட்கிழமை

பழமைக்கு - வித்தூன்றும் பணி!

"மண்ணுலகச் சொர்க்கத்தை நடுபவன் மண்ணுலகின்பத்து மக்களைப் பேற்றவனாக மதிக்கப்படுவான். நாம் உணவுப் பஞ்சத்தால் கஷ்டப்படுகிற நிலைமையில். அந்த பாவத்தைச் சகிப்பதைப் பொறுப்பதைவிட, அதிகமான மரங்களை நடுவது நல்லது ரிக் உபநிஷதத்தில் காணப்படும் உண்மை."

உபநிடத போதனை செய்யும் இந்த உத்தமர் யார்; எங்கே, எப்பொழுது இந்த நைவ உபதேசம் புரிகிறார் அவர் அரைமரத்தடியிலா, அரசமரத்தடியிலா எங்கேனும் அக்ரஹாரத்திலா, அல்லது பஜனை மடத்திலா என்பன போன்ற வினாக்களை எழுப்பத் தோன்றும் வாசகர்களுக்கு.

உபதேசம் புரிபவர், உகைநிலை அறியாப் புராணப்பிரசங்கியல்ல; அவர் பேசுகின்ற இடம், பற்றற்ற பரமனைத் தேடும் பக்தர்கள் கூடும் பஜனை மடமுமல்ல!

நாட்டாளவந்த அமைச்சர் குழாத்திலே, மிக மிக இன்றியமையாப் பொறுப்பினை சுமந்து கொண்டிருக்கும் ஒரு அமைச்சர், டில்லியிலிருந்து கர்த்தா என, பாரதப்பத்திரர்கள் நம்பிக் கொண்டிருக்கும் உணவு அமைச்சர்—தோழர் முன்ஷியார்!

அவர் பேசுகின்ற இடம்— இந்திய உபகண்டத்தின் தலைநகரில் அரசாங்க மாளிகை!

இத்தகைய அமைச்சர், இத்தகைய இடத்திலே பேசுகின்ற பேச்சு, உபநிஷத உபதேசம்!

"உணவுப் பஞ்சத்தை ஓட்ட அதிகமான பிள்ளைப்பேற்றை தவிர்க்க வேண்டும். அதிக மான மரங்களை நடவேண்டும்" இதுதான் உணவு அமைச்சர் உபதேசத்தின் சாரம்!

பிள்ளைகளை வளர்க்க முடியாது! மரங்களை வளர்ப்பது சுலபம். எனவே, மரங்களை வளர்ப்பதே பஞ்சத்தைவிரட்ட பக்குவமான வழி என்கிறார் போலும் அமைச்சர்!

மரங்களின் தேவை; அவை வளர்க்கப்படவேண்டிய அவசியம், இன்னபிற விஷயங்கள் ஒருபுறமிருக்கட்டும். அமைச்சரின் பேச்சு, அதற்கு அவர் காட்டும் ஆதாரங்கள் முதலியன [illegible]ற்றைச் சற்று ஆராய்ந்து [illegible]ர்ப்போம்.

[illegible]ண்ணுலகிலே மரம் நடு[illegible] வன் ஞாலகிலே டத்து [illegible] பேற்றெடுத்த பாக்[illegible]ளுக் கருதப்படுவார் [illegible] ஆகவே மரம் நட[illegible] [illegible] அவசி[illegible]. அவர் [illegible] அவ்வாது [illegible]கிறதாம்!

இவர் அமைச்சர் பணிபுரிவது மண்ணுலகிலே; அதுவும் மண்ணுலகமக்களால் தேர்ந்தெடுக்கபட்டு, மண்ணுலக மக்களுக்காக ஆட்சி செய்யும் மண்ணுலக மந்திரிசபையிலே! இட்டடிப்பட்டவர் மண்ணுலக மக்களின் மண்ணுலக வாழ்வுக்கு வழிகோலாமல், சுலபமாக விண்ணுலக வாழ்வுக்கு வழிகாட்டுகிறார் இந்த இருபதாம் நூற்றாண்டிலே — விஞ்ஞானம் அஞ்ஞானத்தோடு போர்புரிந்து வாகை சூடிடும் வேளையிலே!

மக்கட் தொகை, நாட்டுக்குத் தேவையான உணவு உற்பத்தி இவ்விரண்டையும் ஒப்பிட்டு, அளவிட்டு, கணக்கிட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவல்ல மகத்தான திட்டங்களைத் தீட்டி, தீட்டிய திட்டங்களை விஞ்ஞானத்தின் துணை கொண்டு நிறைவேற்றிப் பார்க்கவேண்டிய பொறுப்பைச் சுமந்து கொண்டிருக்கும் ஒரு அமைச்சர், இங்ஙனம் காலத்துக்கும், கருத்துக்கும் உதவாதபொருள் பற்றி உபதேசம் செய்வது கண்டு, கருத்துடையோர் யார்தான் கவலைப்படாதிருக்க முடியும்?

இதுதானா அமைச்சரின் பணி? இதற்குத்தானா இவர்கள் ஆட்சிப்பீடம் ஏறினர்? உபநிடத உபதேசப் புரிவது தானா உணவு அமைச்சரின் பணி? தோழர் முன்ஷியாரின் அறிவு, ஆற்றல், சட்ட நிபுணத்வம் இத்தனையும் இதற்குத்தானா பயன்படவேண்டும்? இங்ஙனம்உபநிடத உபதேசம் புரிய அமைச்சர் முன்ஷியாருக்கு ஆட்சி மன்றம், அள், அப்பு இன்னபிற வசதிகளும் தேவைதானா? இதற்கு ஆட்சிப்பீடமேறிய அமைச்சர் தேவையில்லையே; அக்கிரகார புராணப் பிரசங்கி ஒருவர் போதுமே!

எனவே, தோழர் முன்ஷியாரின் போதனை பலன் தராதது மட்டுமல்ல; நாட்டுமக்களை காட்டுமிராண்டிக் காலத்துக்கு அழைத்துச் செல்லுவதாகும்.

மக்களுக்கு வயிறார உண்டி அளித்து, அவர்களை வாழவைக்கவேண்டிய ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கும் ஒரு அமைச்சர் உணவுப்பஞ்சத்தை ஓட்ட இத்தகைய கதைக்குதவாக்கருத்தினைவழங்குவது, மகமிக வெட்கக் கேடான செய்தியாகும். கல்வி இன்மை, வறுமை, அறியாமை இன்னபிற இடையூறுகளால், இதைத் திடீரென நாட்டு மக்கள் பாமரராய்; [illegible] இந்நிலையிலே, பற்பல முக்கிய பிரச்னைகளுக்கு முதலிடம் தராமல் [illegible] வளப்பத்திலே இவ்[illegible]க்கரை காட்டு[illegible]கின்[illegible]சியாளர். ஆட்சியாளரின் இந்த அரிய முயற்சி யால் சுலபத்தில் நாடு காடாகலாம். காட்டுவளம் பெருகலாம். ஆனால், அதுவல்ல நாட்டின் இன்றைய தேவை. காடு நாடாகி மாக்கள் மக்களாகவேண்டும்.

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குத் திட்டம் தீட்ட முடியா விட்டாலும், மக்களை மாக்களாக்கி; நாட்டைக் காடாக்க உபநிட போதனையைத் தணைக் கொள்ளாமலாவது இருக்கட்டும். தோழர் முன்ஷியாரும் அவர் தம் குழுவினரும் என கூற ஆசைப்படுகிறோம்.

மரம் நடும் விழா என்ற முறையிலே முன்ஷியாரும், ஆட்சிப்பீடத்திலமர்ந்துள்ள பிறரும், ஆங்காங்கு பேசியிருக்கும் பேச்சுக்கள், மக்கள் உள்ளத்திலே பழமைத் தீனை வளரத்தான் பயன்பட்டுள்ளது இது கூடாதது வேண்டாதது. ஆட்சியா[illegible] மரம் நடும் விழா; மக்[illegible] உள்ளத்தில் பழமை[illegible] வித்துாறும் [illegible] பணியாக[illegible]து என்பதை சுட்டிக்காட்ட வி[illegible]ரும்.

சர்வதேச மூளை ஆராய்ச்சி நிலையம்

லேக்ஸக்ஸஸ், ஜூலை 1— எட்டு புகழ்பெற்ற சர்வதேச மூளை ஆராய்ச்சி நடத்துவதென்று திட்டமிட்டுள்ளனர். இதற்கென சர்வதேச மூளை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஐக்கிய நாடுகள் ஏற்படுத்த வேண்டுமென கூறியிருக்கிறார்களாம். இதுபோன்றே வேறு பல ஆராய்ச்சிகளை நடத்தவும் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

தாவர ஆராய்ச்சிக்கு அணு சக்தி

நியூயார்க், ஜூலை 2— தாவர ஆராய்ச்சிக்கு அணு சக்தியை பயன்படுத்துவதற்காக ஒரு விசேஷ ஆராய்ச்சி நிலையத்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்த ஆராய்ச்சியின் விளைவாக தாவர உற்பத்தியில் பல அரிய சாதனைகள் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆராய்ச்சி விஷயமாக யு. எஸ். விவசாய இலாகாவும், அணுசக்தி கமிஷனும் ஒத்துழைக்கின்றன.

அதிக குழந்தைகள் பெற்றால் அபராதம்

சிட்னி, ஜூலை 2— "உலகில் ஜனத்தொகை வெகு வேகமாக அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க, உலகமெங்கும் கர்ப்பத்தடை இயக்கம் பரவவேண்டியது அவசியம். அத்து[illegible] பட்ட குழந்தைகளைப் பெறுகிறவர்களுக்கு அபராதமும் விதிக்க வேண்டும்" என்று, சார்ட் செட்லண்ட் ரஸ்ஸல் இன்று 'ஒப்சர்வர்' பிரமுகருக்களித்த பேட்டியில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:- இம்மையில் கஷ்டம் அனுபவித்தால், 'மறுமையில்' சுகம் அனுபவிக்கலாம் என்று எண்ணுவோர்கள், குழந்தைகளை வைத்துக்கொண்டு கஷ்டத்தை இந்த ஜன்மத்திலேயே அனுபவிக்கிறோமே என்று கூறுகிறார்கள். ஆனால் இது சரியான வாதம் என்று எனக்குப் படவில்லை.

போர்மோஸா படையெடுப்பு

செஞ்சீனா-ரஷ்யா ஆலோசனை

லண்டன், ஜூன் 2— போர்மோஸா மீது படையெடுப்பு ஆரம்பமாகி விட்டால், கொரியா போர் இப்போதுள்ள முக்கியத்துவத்தை இழந்துவிடும் என்று, ஹாங்காங்கிலுள்ள விமர்சகர்கள் கூறுகிறார்கள். போர்மோஸா படையெடுப்பு விஷயமாக இன்னும் சில தினங்களில் முடிவு செய்யப்படும் என்றும் இதற்குள் சீன கம்யூனிஸ்டுகள் ரஷ்யரைக் கலந்தாலோசிப்பர் என்றும் தெரியவருகிறது.

போர்மோசாவை 'விடுவிக்க' கம்யூனிஸ்டுகள், ஏற்கனவே உறுதி கொண்டிருக்கின்றனர் என்பதுடன், ரஷ்ய டெக்னீஷியர்கள், ராணுவ அதிகாரிகள் இவர்களின் யோசனையின் பேரிலேயே முஸ்தீபுகள் செய்து வந்திருக்கின்றனர்.

25000 துருப்புகளைக் கொண்டுசெல்ல, சுமார் 5000 படகுகள் கிழக்கு சீன கடற்கரையிலும், யாங்ட்ஸி முகத்துவாரத்திலும் செஞ்சீனர்களால் வைக்கப்பட்டிருக்கின்றனவென்று சவினிங்ஸ்டாண்டர்ட் நிருபர் கூறுகிறார்.

ஆனால், தீவின் மீது படையெடுக்க முடியாமல் குறுக்கே யுனைடெட் ஸ்டேட்ஸின் 7-வது கடற்படை நிற்கிறது.

இராக்கிற்கு அதிக டாலர் தேவையாம்

பாக்தாத், ஜூலை 2— இராக்கிற்கு டாலர் தேவை அதிகரித்திருக்கிறதென்றும், இவ்விஷயமாக பேச்சுவார்த்தை நடத்தவே இராக் நேஷனல் பாங்கி உதவி கவர்னர் ஜெனரல் லண்டன் சென்றிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

மலேயாவுக்கு விமான உதவி

லண்டன், ஜூலை 2— மிகவும் அவசியமானால், தென் கொரியாவுக்கு உதவ, விமானங்கள் மலேயாவிலிருந்தே அனுப்ப வேண்டியிருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஹாங் காங்கில் போதிய விமானங்கள் இல்லையாம்.

ஆத்மீக ஆதரவே போதுமாம்!

டைமஸினர் பழமைப்பித்து

லண்டன், ஜூலை 2— ஆசியாவின் முக்கிய நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் தென் கொரியா விஷயத்தில், ஐ. நா. தீர்மானத்தை வரவேற்று 'டைம்ஸ்' எழுதியிருக்கிறது.

டைம்ஸ் ராஜதந்திர நிருபர் விஷயமாக எழுதுகையில், காமன் வெல்த் மெம்பர் நாடுகளில் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து இவைகளிடம்மட்டுமேதான் ராணுவ உதவி கேட்கப்படுமே அல்லது இதர காமன்வெல்த் நாடுகளிலும் அம் கேட்கப்படுமோ என்பதுதெரிய வில்லை என்[illegible] இந்தியாவின் ஆத்மீ[illegible] கிடைத்ததே பெரும்பா[illegible]ன்றும் ஐ. நா. வுக்கும், [illegible]ட் ஸ்டேட்ஸுக்கும் [illegible] பெரும் மதிப் புள்[illegible]ம் எழுதி[illegible]

ரஷ்யாவின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோ-சீனா முதலிய சின்னஞ் சிறு பகுதிகளையெல்லாம் அந்தந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட்டுக் குழுக்களின் உதவிகொண்டு, எளிதில் அவற்றைத் தம் வசப்படுத்த ரஷ்யா முனையலாம்.

ரஷ்யாவின் இத்தகைய நடவடிக்கையினை அறிந்தே, அமெரிக்கா கிழக்குநாடுகளில் தனது படை பலத்தை அதிகப்படுத்த முன்வந்திருக்கிறது போலும். இதே சமயத்தில், ஐரோப்பாவில் ஜெர்மனியும், யூகோவும் போருக்கு ஏற்ற இடங்களாக உருவாகிக் கொண்டு வருகின்றன. ரஷ்யாவின் திட்டத்தை அறிந்து, அதனைத் தகர்ப்பதாகக்கருதிக் கொண்டு, அமெரிக்கா கிழக்கில் போர் முஸ்தீபுகளைச் செய்து வரும்வேளையில், ஜெர்மனியை அன்று ஹிட்லர் ஆஸ்டிரியாவை ஒரே இரவில் கைப்பற்றியதுபோல் கைப்பற்ற ரஷ்யா திட்டமிடுகிறது.

எனவே, இத்தகைய சூழ்நிலைகள் அனைத்தும் சேர்ந்து விரைவில்ஒருபெரும்போராக மூண்டாலும் மூளக்கூடும். அதுவே, உலகப் போராக ஆனாலும் ஆகலாம். இதை அடுத்தப்படியாக ரஷ்யா என்ன நடவடிக்கை எடுக்கிறது. எக்காட்டின் மீது பாய்கிறது என்பவைகளைப் பொறுத்தே இருக்கிறது.

ஜப்பான்மீது ரஷ்ய வெடிகுண்டு விமானம்

டோகியோ ஜூலை 1— ஜப்பானின் வடபகுதியில் உள்ள கடற்கரையோர நகரமொன்றின் மீது, சோவியத் குறியுடன் கூடிய இரட்டை எஞ்சின் பாம்பர்ஒன்று காணப்பட்டதாக நேமுரோ என்னுமிடத்திலுள்ள ஜப்பானிய போலீஸார் அறிவிக்கின்றனர். இந்த விமானம் கொனே பேட்டு என்னுமிடத்திலுள்ள பழைய விமானத்தின் மீது பறந்து சென்றதாம்.

ஜப்பான்மீதுசோவியத்விமானம் காணப்பட்டதாகச் சொல்லப்படும் இச்செய்தியே, ஜப்பான் அரசாங்கம் வெளியிடும் உத்தியோக பூர்வமான முதல் அறிக்கையாகும். இதற்கு முன், அடையாளம் தெரியாத சில விமானங்கள் காணப்பட்டபோதிலும், இப்பொழுதுதான் இச்செய்தி உறுதி செய்யப்படுகிறது.

'ஸாஸர்' அளவில் ரேடியோ

லண்டன், ஜூன் 2— ஒரு ஸாஸர் தட்டில் வைக்கக் கூடியதும் 9 அங்குல குறுக்களவு கொண்டதும் அறுமினிய வெளிப்பூச்சு உடையதுமான மலிவான ரேடியோ செட்டுகளை பிரிட்டன் ஏராளமாகத் தயாரித்து விற்கிறது. இதை அமெரிக்கர்கள் ஏராளமாக வாங்கியிருக்கிறார்கள்.

இதன் விலை ரூ. 100 தானும் வடரொடீஷியாவிலுள்ள ஒருதேசிஞர் கடந்த நான்கு மாதத்தில் 1700 செட்டுகள் விற்பனையாகி இருக்கிறது.

அடிப்படை உரிமைகளைப் பறிக்க முயல்வது ஆபத்தானது

பார்ப்பனரின் ஆதிக்கவெறியே வகுப்பு துவேஷத்தை வளர்க்கிறது

திராவிட இயக்கத்தின் இலட்சியங்கள் அனைவருக்கும் பொதுவானதே

ஆரணி மாநாட்டுத் தலைவர் முடிவுரை

நாட்டிலே பலர், நம்மைக் குறித்து, நம்மிடம் கேட்டறியாமலேகூட, தவறாகக் கருதிக்கொண்டுள்ளனர். காங்கிரஸ் பிரசாரர்களும், வைதீகர்களும், பிற்போக்கு வாதிகளும், சுயநலமிகளும் செய்துவரும் பொய் பிரசாரத்தை நம்பி நாத்திகர்கள், கடவுள் நிந்தகர்கள், மதத் துரோகிகள், வகுப்புவாதிகள், பிராமணத்துவேஷிகள், தேசத் துரோகிகள் என்றெல்லாம் கருதுகின்றனர், நம்மைப்பற்றி.

உண்மையில், நமது கொள்கைகளினால் யாருடைய சூதும், சூழ்ச்சியும் வெளிப்பட்டு, சுயநல மோசடிகள் தடைப்பட்டு, ஏகபோக வாழ்வுக்குச் சிறிதேனும் குறை ஏற்படுகிறதோ அவர்களால் கட்டிவிடப்படும் சூது மொழிகளே இவைகள். பாமர மக்களிலே பலர்—இதனால் ஏமாறுகின்றனர்.

உண்மையில், நாங்கள் 'கடவுள் இல்லை' என்று நாத்திகம் பேசுபவர்களல்ல. அப்படிக் கூறுவதிலே எங்களுக்கு என்ன இலாபம்? ஏன் அப்படிக் கூற வேண்டும் என்றுதான் எண்ணிப் பார்க்கவேண்டும் அவர்கள்.

ஒழுக்கம் நமது உயிர்

அன்பாக, அறிவாக, அருள் அடையாளமாக, ஒளியாக, ஒழுக்கமாக மட்டுமே ஒரு கடவுள் போற்றப்பட்டு வழிபடப்படுமானால், அதை நாங்கள் என்றும் மறுத்ததில்லை, மறுக்கக் காரணமுமில்லை.

ஒழுக்கத்தை, சமூக வாழ்வின் நல்ல சட்டத்தை, நாங்கள் மதித்த காரணத்தால்தான், எங்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய பெரியார் தமது தள்ளாத பருவத்தில் வாலிபத்தைத் தாண்டாத அம்மையை மணந்தபோது, அவரிடத்திலே எங்களுக்கு அன்பு, தயை, அச்சம், பற்று, பாசம் அத்தனையும் இருந்த போதிலும், சமூக ஒழுக்கத்துக்கு அது மாறுபட்டது என்ற ஒரே காரணத்திற்காக, அந்தச் செயலைக் கண்டித்துக் கண்ணீர் சிந்தியபடி கட்சியை விட்டு வெளியேறி, தி. மு. கழகம் கண்டு, அதன் மூலம் பணியாற்றி வருகிறோம். ஒழுக்கம் உயர்வளிக்கும் எனவே, உயிரினும் ஓம்பப்பட வேண்டும். என்ற உண்மையை உலகிற்கே உணர்த்திய வள்ளுவரின் வாய்மொழியாகிய 'குறளைப்' பரப்பி வருவதும் சமூக ஒழுங்கிலே, நாங்கள் கொண்டுள்ள பற்றுக்கு எடுத்துக்காட்டாகும். எனவே, எங்களை மதவிரோதிகள் என்று கூறியே பொதுமக்களை ஏமாற்றி விடமுடியாது. என

எச்சரிக்க விரும்புகிறேன்.

புயல் தோன்றியதில்லை

மற்றும் நாங்கள் வகுப்புத் துவேஷிகளுமல்ல, எந்த ஒரு வகுப்பையும் துவேஷிக்காத தால். வகுப்புத்துவேஷிகள் என்றால் 'வகுப்பு ஏற்பாட்டை' வருணப்பிரிவை, வகுப்புகளையே துவேஷிப்பவர்கள் என்று பொருள் கொண்டால் மட்டும், நாங்கள் வகுப்புத் துவேஷிகள்தான். 'வகுப்புவாதிகள்' என்பதும் பிற்படுத்தப்பட்ட; தாழ்த்தப்பட்ட வகுப்புக்களின் உரிமைக்காக, நீதிக்காக, வாதாடுகிற காரணத்தினால் வேண்டுமானால் பொருந்தலாமே தவிர வகுப்பு வேற்றுமையை வளர்ப்பவர் என்ற பொருளிலே எப்படியும் உண்மையாக முடியாது.

மராட்டிய மண்டலத்திலே, சுயமரியாதை இயக்கம் வேலை செய்ததில்லை, தோழர் அண்ணாவின் முழக்கம் அங்கு கேட்டதில்லை, குடியரசு புகுந்ததில்லை, திராவிட நாடு கண்டதில்லை. ஆனால், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட போது—சுட்டவன் ஒரு பார்ப்பனன் என்ற உண்மை பரவியவுடனே, அப்படிப்பட்ட மராட்டியத்திலே, பார்ப்பனர்கள் மீது மக்களுக்கு அளவு கடந்த ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால் 'பிராமணத் துவேஷிகள்' என்று தூற்றப்படும் நாம், இவ்வளவு பெருசியுள்ள இங்குதான், அந்த நேரத்திலும் அமைதி நிலைத்தது. புயல்தோன்றவில்லை.

நாம், வகுப்புத் துவேஷிகள் என்பதற்குப் பொருள் இருந்தால், என்ன நடந்திருக்கும், என்பதை எண்ணிப் பார்க்கட்டும். மாறாக, அவர்களுடைய கண்களுக்குத் துவேஷிகளாகத் தெரியும் நம்மால், அவர்கள் வாழ்வு கவலைக்கிடமற்றதாக, அமைதியோடு கூடியதாக ஆகியிருக்கிறது. நம்மால் அவர்களுக்கு இலாபமும் ஏற்பட்டிருக்கிறது. சாதி ஏதடா? உயர்வு தாழ்வு உண்மையோடா? என்ற நமது பிரசாரத்தின் விளைவாக, வரதட்சணை தரவகையின்றி, வறுமைக்கு ஆட்பட்டு பொருத்தமான சிறப்புக்களோடு கூடிய பணுளன், மார்க்கெட்டிலே கிடைக்காமல் தவித்த பிராமணப் பெண்களிலே பலருக்கு—நல்லவரன்கள் கிடைத்துள்ளன. திராவிட இனத்திலிருந்து, சுயமரியாதை இயக்கத்தின் காரணமாக எங்களது 'துவேஷம்' அவர்களுக்கு இலாபமும் [illegible] எப்படிப் [illegible] [illegible] ஆகமுடி[illegible] [illegible]களின் அடிப்படை

உரிமைகளை, நியாயமான வாழ்வை, யார் பறிக்க முயன்றாலும், துவேஷம்தான் வளர முடியும். அப்படிப்பட்ட செயல்களிலே பிராமணர்கள் அடிக்கடிக் குதித்து விடுகிறார்கள். ஆனால் தமது தவறைப் பின்னரே உணருகிறார்கள் [illegible]. நமது தோழர் அண்ணாதுரை எழுதிய இலட்சியவரலாறு, ஆரியமாயை என்ற புத்தகங்களின் மீது அரசாங்கத்தார் தொடுத்துள்ள வழக்குகளிலே, பிராமணர்—பிராமணரல்லாதார்களுக்கிடையிலே வகுப்புத் துவேஷத்தை உண்டாக்குவதாகத்தான் குற்றஞ்சாட்டியுள்ளனர், குற்றசாட்டு எப்படி வேண்டுமானாலும் முடிவுக்கு வரட்டும். ஆனால், நம்முடைய இயக்கத்தின் போக்கை ஊன்றிக்கவனிப்பவர்கள், நாம் அல்ல வகுப்புத் துவேஷிகள், என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

பார்ப்பனமாணவர் சிலருக்கு, மருத்துவ பொறியியல் கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லை என்றவுடனே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.

தமது அறிவுக்திறனைக் கொண்டு, தமது ஆதிக்கத்தை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள, நீதியையே வீழ்த்தவும் அளவுக்கு. வெளிப்படையாகவே முன்வருவதுதான், வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புவதற்குக் காரணமாகிறது என்பதை, அவர்கள் இனியாவது உணரவேண்டும்.

சிந்திக்க வேண்டும்

இன்றைய நிலையில் நாட்டிலே வளர்ந்துவரும், வடவரின் பெருக்கையும், தமிழரின் வறுமைப்பெருக்கையும் காண்போர்; தமிழர் வெளிநாடுகளுக்குச்சென்று, தோட்ட வேலை செய்து, பாடுபட்டுப் பலன் காணாது மடிவதையும் அறிந்தோர்; தென்னாட்டார், தமிழர் உரிமையோடு வாழ்ந்தாலொழிய இந்நிலைமைகளை மாற்ற முடியாது என்பதை உணர்வர்.

எனவேதான், பல ஆண்டுகளாகவே, தக்க பல ஆதாரங்களோடும் முழக்கி வருகிறோம் "திராவிடநாடு திராவிடருக்கே" என்று இந்த முழக்கம் ஒரு கட்சிக்கு மட்டுமே சொந்தமானதல்ல, இனத்தின் இலட்சிய கீதமாகும். எக்கட்சியினராயினும், இதன் உண்மையைச் சிந்தித்துப் பார்த்து இனத்தின் இழிவைத் துடைக்க முன்வர வேண்டுகிறோம். வாலிபர்கள் திராவிடத்தின் உரிமையைத் தங்கள் உயிராக, மூச்சாகக் கருதிப் பாடுபட வேண்டுகிறோம்.

பணி தொடர வேண்டும்

மற்றும், மாநாட்டில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான தோழர்கள் இங்கே காட்டும் உணர்ச்சியையும், எழுச்சியையும் இத்துடன் விட்டுவிடாமல், தம், தம் ஊர்களுக்குச் சென்ற பின்பும், உற்சாகம் குன்றாது, தொடர்ந்து பணியாற்ற வேண்டும்; இந்த இலட்சியங்கள் வெற்றியடையும்படி எதிர்க்கட்சித் தோழர்களையும் சிந்திக்கத் தூண்ட வேண்டும். திராவிடம் நமது நாடு, அதை விடுதலையே நமது மூச்சு,

என்பதையும், ஜனநாயகம் மலரவும், மக்கள் ஆட்சி நிலைக்கவும், எதேச்சாதிகார ஏகாதிபத்தியம் விலகவுமே திராவிட முன்னேற்றக்கழகம் பாடுபடுகிறது என்பதையும், நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். எனவே, தி. மு. க. கொடியின் கீழ் மக்களைத் திரட்டுங்கள், தி. மு. கழகத்தின் அமைப்பை வலுப்படுத்துங்கள். உறுப்பினர்களைச் சேருங்கள் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

மறுமுறையும், வரவேற்புக் குழுவினருக்கும், மாநாட்டுப் பிரதிநிதிகட்கும், தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் எனது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வாழ்க திராவிடம்!

வெல்க மக்களாட்சி!!

நீரோவின் கேள்வி

[சுழல்துப்பாக்கி]

★

உறைக்கும் வெயில் தனிலே நான் நடந்து சென்று
உழைத்து வந்தேன் இரவு மணி பதினொன்றுக்கு

சரித்திரத்துக் கதைகள் நண்பன் வழியில் சொன்னான்
சரியென்று செவி மடுத்து இல்லம் வந்து

உறக்கத்தைக் கொள்ளு முன்பு உணவருந்தி
ஊன்றிச் செய்தித் தாளொன்றை பிரித்துப் பார்த்தேன்—
[அதில்

மறக்காதீர் மரங்கள் தன்னை வேதர்க்கு
மந்திரி எனும் ஆணை என்றோர் செய்தி கண்டு

சிரித்தபடி துயிலாழ்ந்தேன் ரோமர் நாட்டு
சீமான் போல் ஒருவன் என் முன் வந்து நின்று

சிரிப்பப்பா ! சிரி !! நான் தான் "நீரோ" என்று
செப்பியவாறென் அருகே அமர்ந்து கொண்டான்

திகைத்திட்டேன் ரோம் நாட்டு மாஜி வேந்தா !
திராவிடத்துத் தமிழகத்தில் நீ ஏன் வந்தாய்

நகைத்திடவே சொல்கிறாய் என்று கேட்க
நானிலத்தில் மடையனென்றும் மூடனென்றும்

வகை வகையாய்க் கதைகள் என்மேல் எழுதி வைத்தீர்
வரலாற்றின் துணை கொண்டோ என்று சொல்வீர்

புகை பொடு தீ நாட்டை வந்து பற்றும் போதும்
போதையிலே ஆழ்ந்து 'பிடில்' இசைத் தேனென்பீர்—
[இன்று

பட்டினியால் உன் நாட்டார் சாகும் போதும்
பசிப்பிணியால் தற்கொலைகள் பல நிகழும் போதும்

எட்டியதன் கசப்பன்ன வாழ்வு என்று
ஏழை ரயில் வாழ்பவர்கள் சபிக்கும் போதும்

கட்டடமும் கலையறிவும் தொழில் நுட்பமும்
கற்றுணர்ந்தோர் வேலையின்றி அலையும் போதும்

மட்டில்லா உணவுப் பஞ்சம் மலியும் போதும்
மரங்களன்றோ நடுகின்றார் நாட்டமைச்சர்

கடமையுணராக் கசடன் என்றீர் என்னை—மக்கள்
கஷ்டமதை உணராத இவர்கள் யாவர் ?

மடமையினால் அறிவிழந்தோன் என்றீர் என்னை—வீணாய்
மரங்கள்தனை நடுகின்ற இவர்கள் யாவர் ?

கொடுமையே உருவாகக் கொண்டேனென்பீர்—நாட்டின்
குறைதீர்க்கக் கூசுகின்ற இவர்கள் யாவர்?—என

மடமடெனக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே
மறைந்துவிட்டான் "ரோம்" மன்னன் விழித்துக்
[கொண்டேன்

வ. ஆ. மாவட்ட தோழர்களுக்கு வேண்டுகோள்

ஆரணி, ஜூன் 29—

ஜூன் 24-25-ல் நடைபெற்ற நம் மாவட்ட தி. மு. க. மாநாட்டின் வரவு செலவு கணக்குகளை சரிபார்த்து வெளியிட வேண்டியிருப்பதால், மாநாட்டு டிக்கட்டுகள் பெற்றிருக்கும் மாவட்டத் தோழர்கள் விற்பனையான டிக்கட்டுகளுக்கு செலுத்தியதுபோக, பாக்கியையும், மீதி டிக்கட்டுகளையும் அருள்கூர்ந்து உடனடியாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பித்தருமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முகவரி :—

பி. பாலகி[illegible]

வ. ஆ. மாவ[illegible]

மாந[illegible]

கே. பி.[illegible]

வரவேற்[illegible]

தென் கொரியாவுக்கு டாலர் தானம்

வாஷிங்டன், ஜூலை 1—

கொரியாட்போரின் காரணமாக, தென் கொரியாவுக்கு யு. எஸ். காங்கரஸ் 7,15,00,000 டாலர் உதவி அளிப்பதாகத் திட்டமிட்டிருக்கிறது.

"வேல்தாங்கி வாழ்ந்தோர் வேப்பிலைக்குச் சாவதா?"

————(:0:)————

"படாடோபப் பத்திரிகைகள் பதுங்குவதேன், இதைக்கூற?"

————(0)————

"நாங்கள் பரந்துகிடக்கிறோம்-கொள்கைகள் பரவிக்கிடக்கின்றன"

————(0)————

கடலூரில் கருணாநிதி

29-6-50 வியாழன் மாலை 7 மணிக்கு, கடலூர் என. டி. மஞ்சக்குப்பம் மைதானத்தில் தோழர் சாமிநாதன் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திடீரென ஏற்பாடு செய்யப்பட்டு சில மணிநேர விளம்பரம் ஆனபோதிலும், பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். தலைவரின் முன்னுரையாக தி. மு. கழகத்தின் கோட்பாடுகளை விரித்துரைத்தார். பிறகு, தோழர் மு. கருணாநிதி பேசிய பொழுது குறிப்பிட்டதன் கருத்தாவது:—

மு. கருணாநிதி

"திராவிட முன்னேற்ற கழகத்திற்கு நாட்டிலே ஏற்பட்டுள்ள நல்வரவேற்பு இன்றைய சர்க்காருக்கு இடிமுழக்கமாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் மீண்டும் எங்கள் பேச்சுரிமையை தடுக்க முனைந்து விட்டார்கள். சிதம்பரத்தில் அண்ணா கூட்டத்திற்கு 144-போட்டு அவர் பேச்சை தடுத்து விட்டால் [illegible] கொள்கைகள் தலைதூக்கிட முடியாதென்று கனவு காண்கிறார்கள். அவர்கள் நினைக்கிற அளவுக்கு நாங்கள் மேடைகளை மட்டும் நம்பிக்கொண்டிருக்க வில்லை. பேச்சு மேடை போனால், நாடக மேடை! நாடக மேடை போனால் பட உலகம். எங்கள் கொள்கைகள் எழுதப்பட்டால்தான் மக்கள் வரவேற்கிறார்கள் என்ற நிலைமையை உண்டாக்கிவிட்டோம். நாங்கள் பரந்து கிடக்கிறோம். எங்கள் கொள்கைகள் பரவிக் கிடக்கின்றன. அண்ணாதுரை பேசக்கூடாதென்றால் கே. ஆர். ராமசாமி உருவத்திலே வந்து எங்கள் கொள்கைகள் பேசும். காமராஜருக்கு எங்கு போனாலும் அண்ணா வசைபாடுவதுதான் [illegible]லை. கற்பனை செய்து பாருங்கள். காமராஜர் ஒருநாள் இரவு படுக்கையில் இருந்து புலம்பிக்கொண்டு [illegible] கீழே விழுவார். ஏன்? கனவிலே [illegible]ப்புக்கொடி வந்து அவரை [illegible] முறைத்திருக்கிறது [illegible]....தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பதவி கூட [illegible]ர விட்டு ஓடுந்தூரா [illegible] [illegible]

பத்திரிகை உலகத்தின் படாடோபப் பித்தலாட்டங்களால் நம் கொள்கைக்கு சிறிது தேக்கம் ஏற்பட்டாலும் முடிவில் வெற்றி நமக்குத்தான்.

நம் தோழர்களின் வீடு திடீரெனத் தீ இரையாகிவிட்டால் முக்கண்ணனின் கோபம் என்பார்கள் பக்தர்கள்! இதே சர்வ சக்தியுள்ள சாமிலை அய்யப்பனை உருத்தெரியாமல் உடைக்கப்பட்டு, கோயிலும் அக்கினிக்கு இரையாகிவிட்டது. இந்த அவமானத்தைப் போக்கிக்கொள்ள ஒரு திரை போடுகிறார்கள். அய்யப்பன் பரம்பாக மாறிவிட்டான் என்று புதுப் புராணம் புனைகிறது ஆரிய ஏடு. அழகர்சாமி குமரப்பட்ட கும்பாபிஷேகம் சர்வோத்தமனின் திருப்பு என்று கூறிய வைதிகம், திருவண்ணாமலை ரமணருக்கு ஏற்பட்ட புற்றுநோய் யார் தந்த பரிசு என்று ஏன் சிந்திக்கவில்லை? புகையான் ரமணரின் தெய்வீக சக்திக்கு அளவு [illegible] வானத்திலே ஜோதி கிளம்பியது என்று கதை கட்டியது பத்திரிகை உலகம். இந்த நிலைமை நீண்டகாள் நீடிக்க முடியாது. கொரியா போரைப் பற்றி அபிப்பிராயம் எழுதி-ஸ்டாலினும்-ட்ருமனுக்கும் உபதேசம் செய்யும் பத்திரிகைகள்-வேல்தாங்கி வாழ்ந்த இனம், இன்று வேப்பிலையை ஒடித்துக்கொண்டு-சாமியார்களுக்குப் பயந்துகொண்டிருக்கிற பரிதாபத்தை ஏன் கண்டித்து எழுதக்கூடாது. முட்டாள்களை வளர்க்கவேண்டுமென்ற எண்ணந்தானே!

எம் கொள்கைகள் பூத்துக் குலுங்கும் புதுமைச் சோலையாக, திராவிடத்தை ஆக்குவதற்குத்தானே இவ்வளவு தொல்லைகள் ஏற்கிறோம். என்ன இருக்கிறது... மதிப்பு திராவிடத்துக்கு!.... திராவிட இயக்கத்தவருக்கு தரவேண்டாம் மதிப்பு! காங்கிரஸ் கனவான்களுக்கு வடநாட்டிலே மதிப்பு உண்டா? நேருவின் அமெரிக்க விஜயம் செய்தி படித்திருப்பீர்கள். செய்தி விளக்கம் கூறுகிறவர் வாயினால், எத்தனை முறை அமெரிக்கர்கள் தனிநர் விஜய[illegible] ல சமிபையைப்பற்றி கூறினார். அதே நேரு இங்கிலாந்தில் சென்றார் செய்திப்படம் காட்டப்படுகிறது. அங்கே ஸ்டாலினர் சுட்டராயன் நேருவுக்குப் பின்னால் வருகிறார்... போகிறார்...... ஆனால் ஒரு வார்த்தை சுப்பராயன் என்ற எங்கள் காதில் விழவில்லையே? தமிழனாக பிறந்துவிட்ட காரணத்தால் சுட்டராயன் எங்கள் சொந்தக்காரர் என்ற காரணத்தால் ரத்தபாசம் அற்றுவிடவில்லை யென்ற காரணத்தால் கேட்கிறோம்...ஏன் சுப்பராயனுக்கு-விஜயலட்சுமிக்கும் இவ்வளவு வித்தியாசம்? சுப்பராயன் தமிழன் என்பது ஒரு காரணம். அவர் தன்மானத்தை உணராதது மற்றொரு காரணம்.

இத்தனை இழிவுகளையும் துடைக்க-இந்தப் போரை மீண்டும் நடத்த—தடைகளை மீற—வெகு விரைவில் அறப்போர் துவங்கப் போகிறது. மாநாடுகளோடு முடிந்துவிடாது கட்சி! இன்னும் இரண்டொரு வேண்டுகோள்கள். பிறகு எச்சரிக்கை மாநாடு, பிறகு அபாய அறிவிப்பு மாநாடு! பிறகு அந்த அறப்போரிலே குதிக்க அத்தனை திராவிடரும் தயாராகுங்கள்" என்பதாக நீண்டநேரம் பேசினார்.

கூட்டம் பி. எ. இளங்கோவின் நன்றி கூறலுடன் முடிவுற்றது.

அலாஸ்கா பாதுகாப்பு அதிகப்படுகிறது

நியூயார்க், ஜூலை 2—

வைபீரியாவுக்கு எதிர்புறத்திலுள்ள அலாஸ்காவின் பாதுகாப்புகள் வெளிகள் போர் ஆரம்பமானபின்பு இன்னும் அதிகமாக்கப்படுகிறது. இதற்காக அமெரிக்கா 35000,000 டாலர்களைச் செலவிட்டு வருகிறது.

அலாஸ்கா, எஸ்கிமோவிடம் இருந்து முதல் அமெரிக்க ஸ்வீடன் களுக்கு எளிதில் ஆபத்து நேரிடலாம் என்பதற்காகவே இதன் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதில் விசேஷ சிரத்தை காட்டப்படுகிறது.

———

6 வாரங்கள் முன்பே தெரியுமாம்

லண்டன், ஜூலை 2—

கொரியாவில் போர் ஆரம்பமாகப் போவதென்பது பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கு, போர் ஆரம்பமாவதற்கு 6-வாரங்களுக்கு முன்பே தெரியும் என்ற இப்பொழுது தெரியவந்திருக்கிறது.

லண்டனிலிருந்து பிரசுரிக்கப்படும் ஒரு தேசிய தினப் பத்திரிகை, வட கொரியாவைப் படையெடுக்கும்படி செய்ய, ரஷ்யர்கள் திட்டமிட்டு விட்டதாக ராணுவத் தகவல் கூறுவதாகவும், அநேகமாக ஜூலை மாதத்தில் இச்சண்டை ஆரம்பமாகலாம் என்ற எதிர்பார்க்கலாம் என்றும், மேமாதம் 18-வ தேதி பிரசுரித்திருந்தது.

நண்பர்களுக்கு ஓர் நாடக விருந்து!

'திராவிடன்' வார இதழ் அச்சக உதவி நிதி நாடகம்

9-7-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

தோழர் சி. என். அண்ணாத்துரை,

டி. எம். மருதப்பா, டி. வி. நாராயணசாமி, ஈ. வெ. கி. சம்பத், ராஜேந்திரன், மகாலிங்கம், முத்து, ஈழத்து அடிகள், கிருஷ்ணமூர்த்தி, சி. வி. ராஜகோபால், சம்பந்தம், தில்லை-வில்லாளன்

ஆகியோர் நடிக்கும்

சந்திரமோகன்

(பல புதிய காட்சிகள் அமைப்புகளுடன்)

கட்டணம்:—ரூ. 5, 3, 2, 1 (வரி உட்பட)

குறிப்பு:—உதவி நிதி நாடகமாதலால், எவரையும் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டாது.

அன்பழைப்பாளருக்கு மட்டும் தனி இடம் உண்டு.

தோழர்களும், தாய்மார்களும் பெருவாரியாக வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்

சென்னையில் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கெட்டுகள் 29-6-50 முதல் விற்கப்படுகிறது

கே. எம். கண்ணபிரான், 'கலவாய் வீடு' சோலையப்பன் தெரு, வண்ணை.

சி. வி. ராசன், 'செலக்ட் பிச்மென்' செலக்ட் டாக்கீஸ் அருகில் தெக்காம் பஜார்.

'மாலைமணி' அலுவலகம், மண்ணடி.

'திராவிடன்' அலுவலகம் 18, பெருமாள் முதலி தெரு, சென்னை-1.

கே. திருவேங்கடம் பிஸ்கட் பாக்டரி, 200 ராசப்பசெட்டித் தெரு, பார்க்டவுன்.

தோழியர் அலமேலு அப்பாதுரை, 10, அருணாசல ஆச்சாரி தெரு. (பாரகன் டாக்கீஸ் அடுத்த தெரு) சேப்பாக்கம்.

எ. கே. சாமி, 71, ஸ்டிராண்ஸ் ரோடு, ஓட்டேரி.

எல். பாலசுந்தரம், மாணும்பதி ஸ்டோர்ஸ், வில்லேஜ் ரோட், நுங்கம்பாக்கம்.

நாடகத்தன்று காலை முதல் தியேட்டரில் விற்கப்படும்

சத்தியவாணிமுத்து, காஞ்சி மணிமொழியார் அமைப்பாளர்கள்.

ஆசிரியருக்கு முடங்கல்:

மனமாற்றம்

ஐயா!

நான் 1950-ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் தேதி நடந்த 'சந்திரமோகன்", சட்டமெராம்மன், 1950—1960 என். எல். சே. அவர்களின் நாடகம் முதலியவைகளைப் பார்த்து, நான் பெரிதும் மாற்றங்கொண்டேன். 1932—லிருந்து, 1950-ஆம் ஆண்டுவரையிலும் சாதுவாக இருந்தேன், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் வேதங்கள் முதலியவைகளைப் பிச்சை எடுத்துப் படித்து இதுவரை வாழ்ந்துவந்தேன்.

மேற்படி நாடகங்களைக் கண்ட பிறகு இப்பொழுது நான் சீர்திருத்த மேற்படி பழமையிலிருந்து விடுபட்டு, சீர்திருத்தவாதியாக மனம் மாறிவிட்டேன். இதனால் நான் இப்போது சொந்தமான சந்நியாசி வேடத்தைக் களைந்து, நான்தெருத் தெருவாகச் சுற்றி, மனிதன் பிச்சை பிழைக்கிறேன். ஆகவே, இதுபோன்ற சீர்திருத்த நாடகங்களை, பகுத்தறிவு சொற்பொழிவுகளையும் என் போன்றவர்களும், நானும் சீர்திருத்தம் விச்சயம் முன்னேறும் என்பதில், சந்தேகமில்லை. இதைப் பொதுமக்களுக்குத் தெரிவித்து மனமகிழ்ச்சி அடைகிறேன். இதுபோல் மடாதிபதிகளும் பணக்காரர்களும் மனமாற்றம் அடைவார்களேயானால் நாடு வாழும். இது நமது இயக்கத்தோழர்களுக்கும், மற்றவர்களுக்கும், தெரிவித்து மனமகிழ்ச்சி அடைகிறேன். [illegible] வாழ்க [illegible]!

[illegible] வாழ்க [illegible]!!

[illegible]ரா. அம்பல[illegible]
திருவெ[illegible]

மதுரையில் அம்மை நோய்

மதுரை, ஜூன் 2—

மதுரைநகரில், அம்மை நோய் அதிகமாகப் பரவிவருகிறது. கடந்த திங்கட்கிழமையோடு முடிவடைந்த வாரத்தில் 80 பேர் அம்மைநோயால் தாக்கப்பட்டனர். அவர்களில் 17 பேர் மாண்டனர். சுகாதார அதிகாரிகள், இந்நோய் பரவாதபடி தக்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

———

பென்சில் பேக்டரி தொழிலாளர் சங்கம்

சென்னை, ஜூலை 30—

29-6-50 மாலை சென்னை பென்சில் பாக்டரி தொழிலாளர் சங்கத்தின் சார்பாக பறவைக்குடாரப்பேட்டை லாலாதண்டா மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம் தலைமை வகித்தார். மற்றும் தோழர்கள் ஆர். எல். விஸ்வநாதன், ஆர். எ. நாராயணசாமி ஆகியோர் பேசினர். பின் வருகிற இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. 1947 ஆண்டு முதல், தொழிற் சங்கத்தின் ஒப்பந்தப்படி இரண்டு காலணாவாக இருந்ததை மாற்றி, மற்ற பாக்டரிகளில் உள்ளதுபோல மூன்று அணாவாக கொடுக்க வேண்டும்.

2. சம்பள உயர்வு ஆண்டுக்கொரு முறையாக இருக்கவேண்டுமென தீர்மானிக்கிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

4-7-50

வனையம்பட்டி:—சி. பி. சிற்றரசு.

5-7-50

கள்ளக்குறிச்சி:—சி. பி. சிற்றரசு.

Printed & Published by T. M. Parthassarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St. Madras-1